# <u>சாதாரணக்கூட்டம்</u>

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் 2020 ம் ஆண்டு மே மாதம் 29 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

**<u>பொருள் : 01</u>**

நகராட்சிக்கு சொந்தமான 12 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் ஏற்றப்படும் குடிநீரில் திரவ குளோரின் கலந்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது கொரானா–19 வைரஸ் பரவி வருவதால், குடிநீரில் குளோரின் அளவு ஆரம்ப இடத்தில் (Initial point) 3.00–4.00 PPM வரையிலும், இறுதிப் பகுதியில் (Tail End) 0.50 PPM அளவிலும் இருக்க வேண்டும் என நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், திருப்பூர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது 9 மேல்நிலைத் தொட்டிகளில் திரவ குளோரின் கொள்ளளவு மிக குறைவாக இருப்பதால் புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கி, பணியினை மேற்கொள்ள காலதாமதம் ஏற்படும். எனவே பொதுமக்களின் நலன் கருதி, சுகாதாரத்தை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி உடன் சப்ளை செய்யப்பட வேண்டும். ஆனால் தற்போது தோராயமாக 8000 லிட்டர் திரவ குளோரின் தேவைப்படுகிறது. இவ்வலுவலக நகர்மன்றத் தீர்மான எண் : 229 நாள் :18.10.2019ல் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் திரவ குளோரின் சப்ளை செய்வதற்கு திருவாளர்கள். ஸ்ரீ ராஜ கணபதி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சென்னை அவர்களுக்கு 21.10.2019ல் சப்ளை உத்தரவு வழங்கப்பட்டு, முதல் மற்றும் பகுதி பட்டியல் 15.11.2019ல் ரூ.1,18,200/– பில் தொகை வழங்கப்பட்டது மேற்கண்ட மதிப்பீட்டில் தற்போது 8000 லிட்டர் சப்ளை செய்தால் மதிப்பீட்டை விட கூடுதலாக தோராயமாக ரூ.40,000 ஆகும். எனவே, கொரானா–19 வைரஸ் தொற்று பரவாமல் இருக்க பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரில் ”Super Chlorination” அவசியம் செய்யப்பட வேண்டும். ஆகவே பணியின் அவசர அவசியம் கருதி கூடுதலாக சப்ளை செய்ய இருக்கும் ”Liquid Chlorination” ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஸ்ரீ ராஜ கணபதி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சென்னை அவர்கள் ஏற்கனவே அளித்துள்ள விலை விகிதத்தில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களால் 13.04.2020 அன்று ஒப்புதல் பெறப்பட்டு, மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு உடன் சப்ளை செய்யுமாறு 15.04.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. ஒப்பந்ததாரர் 18.04.2020 அன்று 7900 லிட்டர் ”Liquid Chlorination” சப்ளை செய்ததற்கான பட்டியல் சமர்ப்பித்துள்ளார். இதனால் மதிப்பீட்டை விட கூடுதலாகும் ரூ.28,800/–ஐ தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920ன் பிரிவு 15’ன் கீழ் பணி மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 684/2019/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை ‘தமிழ்நாடு நகராட்சிகளின் அவசர சட்டம் 1920ன் பிரிவு 15’ன் கீழ் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் : 02</u>**

வார்டு எண் : 04 அரசு கலைக் கல்லூரி நுழைவு வாயிலிருந்து வடக்கே அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி வரையில் மழைநீர் வடிகாலினை உயர்த்தி கட்டுதல் மற்றும் மழைநீர் வடிகால் பக்கவாட்டுச் சுவற்றிக்கும் சுற்றுச்சுவருக்கு இடையே உள்ள பகுதியினை அமைக்கவும் மற்றும்

கலைக்கல்லூரி முகப்பில் சிறுபாலம் (Pipe culvert) அமைத்து பக்கவாட்டுச் சுவர்கள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.6.50 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் : 409/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 03**

நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் :01 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் உள்ள அத்திக்கடவு குடிநீர் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்பு, நீர்க்கசிவு மற்றும் பழுதுகளை சரி செய்யவும் மற்றும் குடிநீர் அல்லாத பிற தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் ஆழ்துளைக் குழாய் கிணறுகள், திறந்தவெளிக் கிணறுகள் மூலம் மின்மோட்டார் மூலம் தண்ணீர் விநியோகப்படுவதில் ஏற்படும் குழாய் உடைப்பு, நீர்க்கசிவு மற்றும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் : 409/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 04**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளில் உள்ள குடியிருப்பு பகுதிகள், கடைவீதிகள், முக்கிய சாலைகள், பேருந்து நிலையம், உழவர் சந்தை , தினசரி காய்கறி கடை, அரசு அலுவலகங்கள், அரசு மருத்துவமனை, அரசு குடியிருப்புகள், வங்கி ஏடிஎம் அறைகள், வெளிமாநிலத்தவர்கள் வசிக்கும் பகுதிகள், வெளியூரிலிருந்து வரும் வாகனங்கள், நகராட்சி வாகனங்கள் மற்றும் அனைத்து பொது இடங்களிலும் தொடர்ந்து கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், நகராட்சியின் பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் ,ஒப்பந்த சுகாதார பணியாளர் DBC பணியாளர்கள், நகராட்சி அலுவலக பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு தினசரி முககவசம், கையுறை, கை கழுவும் திரவம், கை கழுவும் கிருமிநாசினி திரவம் ஆகியவற்றை, தினசரி தொடர்ந்து வழங்க வேண்டிள்ளதாலும், பணியின் அவசர அவசியம் கருதி கொரோனா தடுப்பு நடவடிக்கை பணிகளுக்காக கீழ்கண்ட கிருமிநாசினிகள் கொள்முதல் செய்ய வேண்டியதன் விபரம் : -

1. லைசால் (Liquid Floor Cleaner) – 1000 லிட்டர்.
2. சோடியம் ஹைப்போ குளோரைடு –1000 லிட்டர்.
3. பாதுகாப்பு உடை (PPE) –300 எண்ணிக்கை.
4. முககவசம் –7500 எண்ணிக்கை.
5. கையுறை –200 லிட்டர்.
6. கை கழுவும் சோப்பு திரவம்–200 லிட்டர்.
7. சேனிடைசர் –200 லிட்டர்.

அரசு கடித எண்: 74JS(MA1நிதித்துறை (சம்பளம்)/2020, நிதித்துறை நாள் : 01.04.2020ன்படி மேற்கண்ட பொருட்கள் வாங்க ஒப்பந்தம் கோருவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே,

மேற்கண்ட கிருமி நாசினிகள் கொள்முதல் செய்ய ஆகும் தோராய செலவினத்தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கண்ட கிருமி நாசினிகள் ஒப்படைப்பு பணியாக செய்யவும், இச்செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : **330/2020/எச்1)**

**<u>பொருள் : 05</u>**

வார்டு எண் :12 மேற்கு பல்லடம், எக்ஸ்டென்சன் வீதி, முல்லை நகர், கலைமகள் கார்டன் பகுதிகளில் குடிநீர் தவிர இதர தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஆழ்துளைக் கிணறு நீர் நீர்மட்டக் குறைவு (Water table) ஏற்பட்டு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனை ஈடுசெய்ய தற்போது போதிய நீர்வரத்துள்ள மேற்கு பல்லடம் மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் அமைந்துள்ள திறந்தவெளி கிணற்றினை தூர் வாரி புதிய மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் விநியோகம் செய்தால், மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்கு ஏற்படும் தண்ணீர் பற்றாக்குறையினை சரி செய்யலாம். எனவே இப்பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.1.20 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் : 409/2020/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 06**

வார்டு எண் 17 மாணிக்காபுரம் சாலை மற்றும் வார்டு எண் 18 எஸ்.ஏ.பி நகர் ஆகிய பகுதிகளில் ஆழ்துளைக்கிணறு அமைக்க ரூ.8.20 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அதில் மதிப்பீட்டை விட 0.11 % குறைவான விலை விகிதம் அளித்த திரு.வை.கருப்பசாமி, ஒப்பந்ததாரர் அவர்களுக்கு 05.08.2019 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. தற்சமயம் எஸ்.ஏ.பி நகரில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டி அமைக்கப்பட்டு சீரான முறையில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதால், எஸ்.ஏ.பி நகர் மற்றும் மாணிக்காபுரம் சாலையில் ஏற்பட்ட தண்ணீர் தேவை அதிகமாகவுள்ள வார்டு எண் 13 முல்லை நகர் மற்றும் ராம் நகர் பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைத்தால், தண்ணீர் பற்றாக்குறையை சரி செய்ய இயலும். எனவே மதிப்பீட்டை விட மிகாமல் ஏற்கனவே 0.11% மதிப்பீட்டை விட குறைவான விலை விகிதம் அளித்துள்ள திரு.வை கருப்பசாமி , ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் திருத்திய நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் : 139/2018/இ1)

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 07**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண் 1456/2020/ஏ1 நாள் :18.05.2020 ல் திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலகத்தில் உள்ள காணொளி கூட்ட அரங்கிற்கு Core I1 All in One Desktop கணினி ஒன்று வாங்கி வழங்கக் கோரியுள்ளதன் அடிப்படையில் புதியதாக கணினி வாங்கவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.55,000/— க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் : 409/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020—2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 08**

கொரானா வைரஸ் கிருமி வேகமாக பரவி வருவதால், மாநில அரசு இதனை பரவாமல் தடுக்கும் பொருட்டு முககவசம் அணிதல், சமூக இடைவெளி மற்றும் கை கழுவுதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு உத்திரவினை பிறப்பித்துள்ளது. பொதுமக்கள் அதிகம் கூடும் என்.ஜி.ஆர். சாலை மற்றும் உழவர் சந்தை பகுதியில் மக்கள் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தி சமூக விலகலை கடைபிடிக்க விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ஒழுங்குபடுத்திடவும் வாடகை அடிப்படையில் ஒலிப்பெருக்கி மற்றும் சவுண்ட் பாக்ஸ் மூலம் விளம்பரப்படுத்தும் பணி மேற்கொள்ள வேண்டிய அவசர அவசியம் கருதி 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.25,000/—க்கு தனிஅலுவலர் அவர்களால் 26.03.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை திரு.சபி, பாத்திமா ஆடியோஸ், பல்லடம் அவர்கள் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.24,600/— வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் : 09**

வார்டு எண் :12 கொசவம்பாளையம் சாலை பொதுவினியோகக் கடை அருகிலுள்ள ஆழ்துளைக் கிணற்று 7.50 HP மின்மோட்டார் பழுதடைந்துள்ளதால், மேற்கு பல்லடம் அரிசன காலனி பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் தவிர இதர பயன்பாட்டிற்கு தண்ணீர் தேவைப்படுகிறது. மேலும் தற்போது கொரானா வைரஸ் தொற்று பரவி வரும் சூழ்நிலையில் தண்ணீர் தேவையின் அவசியம் கருதி இதனை பழுது பார்த்து பணி மேற்கொண்டால் தண்ணீர் பிரச்சினையை தீர்க்கலாம். எனவே அவசர அவசியம் கருதி 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.28,000/—க்கு தனிஅலுவலர் அவர்களால் 03.04.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.27,181/—வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் : 10**

வார்டு எண் :04 பி.எம்.எஸ் நகர் பகுதியில் சேகரமாகும் கழிவுநீரை தரைமட்டத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு, 5.00 HP மின்மோட்டார் மூலமாக மங்கலம் சாலை பிரதாக கழிவுநீர் கால்வாயில் கொண்டு சேர்க்கப்படுகிறது. மேற்படி பயன்பாட்டில் இருந்த வந்த 5.00 HP மின்மோட்டார், சுமார் 8 வருடங்களுக்கு மேலாக பொருத்தப்பட்டது. தற்போது பழுது நீக்கி அதனை இயக்க முடியாத நிலை உள்ளது. இதனால் கழிவுநீரானது தரைமட்டத் தொட்டி (Ground Level Sump) நிரம்பி சாலையின் மேற்புரம் சென்று நெடுஞ்சாலை துறை சாலை பழுதடைந்தும், சுகாதாரத்திற்கும் இடையூறாக உள்ளது. எனவே, அப்பகுதி பொதுமக்களின் சுகாதார நலன் கருதியும், தற்போது கொரானா வைரஸ் தொற்று பரவி வருவதாலும் இப்பணியினை உடன் செய்து முடிப்பதன் அவசியம் கருதி 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் புதிதாக 5.00 HP மின்மோட்டார் புதியதாக வாங்கி பொருத்த மதிப்பீடு ரூ.41,000/–க்கு தனிஅலுவலர் அவர்களால் 03.04.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.40,353/–வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் : 11**

காய்கறி மற்றும் வணிகம் சார்ந்த கடைகள் என்.ஜி.ஆர் சாலையில் அமைந்துள்ளதால் பொதுமக்களின் வாகனம் உள்ளே வராமல் இருக்கவும், சமூக இடைவெளியை கடைபிடித்து கொரானா வைரஸ் பரவலை தடுக்கும் பொருட்டும், என்.ஜி.ஆர் சாலை–மங்கலம் சாலை சந்திக்கும் இடது, வலது ஆகிய இரண்டு இடங்களிலும் மற்றும் மேற்கே திருச்சி சாலை சந்திப்பு அண்ணாசிலை அருகிலும் தடுப்பு வேலி (Barricade) அமைப்பதற்கு அவசர அவசியம் கருதி 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.50,000/–க்கு தனிஅலுவலர் அவர்களால் 25.03.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.47,956/–வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் : 12**

கொரானா வைரஸ் கிருமி மனிதர்களுக்கு வேகமாக பரவி வருவதால், மாநில அரசு இதனை பரவாமல் தடுக்கும் பொருட்டு சமூக விலகல் ஏற்படுத்த 144 தடை உத்திரவினை பிறப்பித்துள்ளது. எனவே பொதுமக்கள் அதிகம் சென்று வரும் உழவர் சந்தை பகுதியில் இரண்டு இடங்களில் தடுப்பு (Barricade) அமைப்பதற்கு அவசர அவசியம் கருதி 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ்

பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.20,000/—க்கு தனிஅலுவலர் அவர்களால் 25.03.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.17675/—வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு :</u>

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

<u>பொருள் : 13</u>

கொரானா வைரஸ் பரவலை தடுக்கும் பொருட்டு, தினசரி சந்தை மற்றும் உழவர் சந்தை சார்ந்த காய்கறிக் கடைகள் அனைத்தும் ஒரே இடத்தில் பேருந்து நிலையத்தின் உட்புறம் அமைத்து பொது மக்கள் சமூக விலகலை கடைபிடிக்க ஏதுவாக இடைவெளி விட்டு கடைகள் அமைக்கப்பட்டது. பேருந்து நிலைய முகப்பில் இலவச சிறுநீர் கழிப்பிடம் அருகே உழவர் சந்தை அமைக்க இருப்பதால் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு இலவச சிறுநீர் கழிப்பிடம் அருகே தடுப்பு அமைப்பு (Barricade) ஏற்படுத்துவதற்கு அவசர அவசியம் கருதி 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.40,000/—க்கு தனிஅலுவலர் அவர்களால் 31.03.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.39,538/—வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு :</u>

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

<u>பொருள் : 14</u>

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் :08 பனப்பாளையம் பெத்தம்பாளையம் சாலை பகுதியில் இரண்டு நபர்களுக்கும் மற்றும் வார்டு எண் :17 பாரதிபுரம் பகுதியில் இரண்டு நபர்களுக்கும் கொரானா வைரஸ் தொற்று உறுதியாகி இருப்பதால், மேற்குறிப்பிட்ட பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டிய (Containment Zone) பகுதியாக அறிவிக்கப்பட்டு அப்பகுதிகளுக்கு செல்லும் அனைத்து வழிகளும் தடுப்பு வேலி (Barricade) கொண்டு 6 இடங்களில் அடைப்பதற்கு அவசர அவசியம் கருதி 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.60,000/—க்கு தனிஅலுவலர் அவர்களால் 13.04.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.58,686/— வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு :</u>

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் : 15**

கொரானா வைரஸ் கிருமி வேகமாக பரவி வருவதால், மாநில அரசு இதனை பரவாமல் தடுக்கும் பொருட்டு சமூக விலகல் ஏற்படுத்த 144 தடை உத்திரவினை பிறப்பித்துள்ளது. நகராட்சிப் பகுதியில் நோய்த்தொற்று தடுப்புப் பணியில் ஈடுபடும் நிரந்தர மற்றும் வெளிக்கொணர்வு பணியாளர்களான சுகாதாரப் பணியாளர்கள், கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள், குடிநீர் மற்றும் ஆழ்துளைக் கிணற்று நீர் விநியோகம் செய்யும் பணியாளர்கள், தெருவிளக்கு மின்மோட்டார் பழுது சரி செய்யும் பணியாளர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை (Identity Card) வழங்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. எனவே, அவசர அவசியம் கருதி 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.42,000/—க்கு தனிஅலுவலர் அவர்களால் 06.04.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை திரு.P.சரவணன், ராஜ் டிஜிட்டல் ஸ்டுடியோ, பல்லடம் அவர்கள் மூலம் 373 பணியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான செலவு தொகை ரூ.41,030 /—வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் : 16**

வார்டு எண் :11 மகாலட்சுமி அவென்யூ பகுதியிலுள்ள பூங்காவில் அமைந்துள்ள ஆழ்துளைக் கிணற்று 7.50 HP மின்மோட்டார் பழுதடைந்துள்ளதால், அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் தவிர இதர பயன்பாட்டிற்கு தண்ணீர் தேவைப்படுகிறது. மேலும் ஆண்டாள் நகரில் உள்ள பசுமை உரக்குடிலுக்கும் இதே ஆழ்துளைக் கிணற்றிலிருந்து தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது கொரானா வைரஸ் தொற்று பரவி வரும் சூழ்நிலையில் தண்ணீர் தேவையின் அவசியம் கருதி இதனை பழுது பார்க்கும் பணியின் அவசர அவசியம் கருதி 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.67,000/—க்கு தனிஅலுவலர் அவர்களால் 02.04.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.66,209/—வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் : 17**

பொதுமக்கள் சமூக விலகலை கடைபிடித்து கொரானா வைரஸ் பரவலை தடுக்க, பொதுமக்கள் அதிகம் கூடும் பொது இடங்கள், மளிகை பொருட்கள் விற்பனை செய்யப்படும் சந்தைப் பகுதி, பொது விநியோகக் கடைகளில் குறிப்பிட்ட இடைவெளியில் பொதுமக்கள் நின்று பொருட்கள் வாங்கி செல்லும் வகையில் வட்டம் மற்றும் சதுர வடிவில் வெள்ளை வர்ண குறியீடுகள் வரைவதற்கு அவசர அவசியம் கருதி 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் பணியினை மேற்கொள்ள

மதிப்பீடு ரூ.10,000/—க்கு தனிஅலுவலர் அவர்களால் 31.03.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திருமதி.வி.கோமதி மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.9,750/—வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் : 18**

பேருந்து நிலையத்தின் உட்புறம் இயங்கி வரும் தினசரி சந்தை மற்றும் உழவர் சந்தை காய்கறிக் கடைகளில் பொதுமக்கள் சமூக விலகலை கடைபிடித்து கொரானா வைரஸ் பரவலை தடுக்க ஏதுவாக, குறிப்பிட்ட இடைவெளியில் பொதுமக்கள் நின்று சென்று காய்கறி வாங்கி செல்லும் வகையில் வட்டம் மற்றும் சதுர வடிவில் வெள்ளை வர்ண குறியீடுகள் வரைவதற்கு அவசர அவசியம் கருதி ‘தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15’ன் கீழ் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.10,000/—க்கு தனிஅலுவலர் அவர்களால் 28.03.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திருமதி.வி.கோமதி மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.9,652 /—வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் : 19**

வார்டு எண் :15 அண்ணாநகர் திறந்தவெளிக் கிணற்று 5.00 HP மின்மோட்டார் மற்றும் வார்டு எண் :12 வடுகபாளையம் மேல்நிலைத் தொட்டி எதிர்புறமுள்ள திறந்தவெளிக் கிணற்று 5.00 HP மின்மோட்டார், குழாய் இணைப்பும் பழுதடைந்துள்ளதால் அந்தந்த பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் தவிர இதர பயன்பாட்டிற்கு தண்ணீர் வழங்கப்படுகிறது. மேலும் வார்டு எண் :13 முல்லை நகர் பகுதியில் உள்ள விநியோகக் குழாயில் நீர்க்கசிவு ஏற்பட்டுள்ளதால், குடிநீர் விநியோகத்தில் அழுத்தம் குறைவு ஏற்பட்டு சீரான முறையில் குடிநீர் குழாய் விநியோகம் செய்ய இயலவில்லை. தற்போது கொரானா வைரஸ் தொற்று பரவி வரும் சூழ்நிலையில் தண்ணீர் தேவையின் அவசியம் கருதி மேற்கண்ட பணிகள் அவசியம் செய்யப்பட வேண்டும். எனவே, பணியின் அவசர அவசியம் கருதி ‘தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15’ன் கீழ் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.49,000/—க்கு தனிஅலுவலர் அவர்களால் 08.04.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.46,956/— வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் : 20

கொரானா வைரஸ் கிருமி வேகமாக பரவி வருவதால், மாநில அரசு இதனை பரவாமல் தடுக்கும் பொருட்டு சமூக விலகல் ஏற்படுத்த 144 தடை உத்திரவினை பிறப்பித்துள்ளது. கொரானா வைரஸ் பரவல் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பொதுமக்கள் அதிகம் வந்து செல்லும் முக்கிய பகுதிகளில் விழிப்புணர்வு பேனர்கள் (Awareness Flex Banner) வைக்கவும், பொதுமக்களுக்கு மலிவு விலையில் தொகுப்பு காய்கறிகள் வழங்க விலைப்பட்டியல் அடங்கிய பேனர்கள் மற்றும் கிருமி நாசினி தெளிக்கும் வாகனங்களை அடையாளம் காணும் வகையில் பேனர்கள் தயாரிக்க வேண்டிய அவசர அவசியம் கருதி 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.36,000/—க்கு தனிஅலுவலர் அவர்களால் 25.03.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை திரு.சி.வினோத் வெங்கடேஷ், சன் சைன் டிஜிட்டல் பிளக்ஸ் பிரிண்டிங்,பல்லடம் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ. 38,728/—வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

அலுவலகக் குறிப்பு :

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் : 21

கொரானா வைரஸ் கிருமி வேகமாக பரவி வருவதால், மாநில அரசு இதனை பரவாமல் தடுக்கும் பொருட்டு சமூக விலகல் ஏற்படுத்த 144 தடை உத்திரவினை பிறப்பித்துள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருப்பூர் அவர்கள் 02.04.2020 ஆம் தேதிய வாட்ஸ் அப் குறிப்பில் Hired vehicle for each ward மூலம் காய்கறிகள் விற்பனை செய்யப்பட வேண்டும் என கூறியுள்ளார். பல்லடம் நகர பொதுமக்கள் காய்கறிகள் வாங்க குறிப்பிட்ட இடங்களுக்கு சென்று வாங்குவதால் கூட்டம் அதிகமாகி தொற்று பரவ வாய்ப்புள்ளது. எனவே பொதுமக்களுக்கு மலிவு விலையில் காய்கறிகளை வார்டு பகுதிக்குள் கொண்டு சென்று விற்பனை செய்வதால், சமூக விலகலை பொதுமக்கள் கடைபிடிக்க முடியும். எனவே, 3 வார்டுகளுக்கு 1 வாகனம் வீதம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளுக்கு 6 வாகனங்களை (TATA ACE) வாடகைக்கு அமர்த்தி பணி மேற்கொள்ள வேண்டிய அவசர அவசியம் கருதி 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் பணியினை மேற்கொள்ள தனிஅலுவலர் அவர்களால் 03.04.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.C.தேவராஜ் அவர்கள் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.2,56,800/—வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

அலுவலகக் குறிப்பு :

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் : 22

பொதுமக்கள் சமூக விலகலை கடைபிடித்து கொரானா வைரஸ் பரவலை தடுக்க, பொதுமக்கள் அதிகம் கூடும் வணிகப் பகுதியான என்.ஜி.ஆர் சாலை, உழவர் சந்தை மற்றும் நகரின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள ஏ.டி.எம் மையங்களிலும் குறிப்பிட்ட இடைவெளியில் வட்டம் மற்றும் சதுர வடிவில் வெள்ளை வர்ண குறியீடுகள் வரைவதற்கு அவசர அவசியம் கருதி 'தமிழ்நாடு நகராட்சிகளின்

சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.15,000/—க்கு தனிஅலுவலர் அவர்களால் 28.03.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திருமதி.வி.கோமதி மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.14,722/— வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு :</u>

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

<u>பொருள் : 23</u>

கொரானா வைரஸ் தொற்று பரவலை தடுக்க கிருமி நாசினி கொண்டு அடிக்கடி கைகளை சுத்தமாக கழுவ வேண்டும் என தமிழக சுகாதாரத் துறை அறிவுறுத்தலின்படி, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து நிலையம், என்.ஜி.ஆர் சாலை, நகராட்சி அலுவலகம், அம்மா உணவகம், ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய இடங்களில் தண்ணீர் வசதியுடன் கூடிய கழுவுத் தொட்டி (Wash basin) அமைப்பதற்கு அவசர அவசியம் கருதி 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.50,000/—க்கு தனிஅலுவலர் அவர்களால் 17.03.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.49,425/—வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு :</u>

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

<u>பொருள் : 24</u>

பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 8 வார்டுகள் 'Home Quarantine' செய்யப்பட்ட பகுதிகளுக்கு 16 இடங்களில் தடுப்பு வேலி (Barricade) அமைப்பதற்கு அவசர அவசியம் கருதி 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.1,63,000/—க்கு தனிஅலுவலர் அவர்களால் 02.04.2020 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.1,58,332/—வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் 360/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு :</u>

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் : 25**

வார்டு எண் :12 மேற்கு பல்லடம், அரிசன காலனி பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறு ஆழம் குறைவு காரணமாகவும், கோடை காலத்தினாலும் நீர்வரத்து குறைவு ஏற்பட்டுள்ளது. தற்போது கோடை காலத்தினாலும், அப்பகுதியில் குடியிருப்புகள் அதிகமான உள்ள காரணத்தினாலும் குடிநீர் தவிர இதர பயன்பாடுகளுக்கு பயன்படுத்தப்படும் தண்ணீர் தேவை அதிகரித்துள்ளது. எனவே, மேற்படி ஆழ்துளைக் கிணற்றினை சுத்தம் செய்து ஆழப்படுத்தி புதியதாக Tank Padal மற்றும் பிவிசி டேங்க் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.90 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் : 409/2020/இ1)

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020- 2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 26**

பல்லடம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தற்போது கிருமி நாசினி தடுப்பு பணிக்கு நீர்த்த சுண்ணாம்புத்தூள் இருப்பில் இல்லாததால், தற்போது கொரோனா வைரஸ் தடுப்பு பணி மேற்கொள்ள இருப்பதால் 10000 கிலோ நீர்த்த சுண்ணாம்புத்தூள் பொது சுகாதார அவசர அவசியம் கருதி சிகேடி ஹெர்பல்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் , 5/91, தில்லை நகர், பொள்ளாச்சி அவர்களிடம் கொள்முதல் செய்யவும், அதற்காகும் தோராய செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனிஅலுவலர் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசியத்தை முன்னிட்டு பணி உத்தரவு வழங்கவும், அதற்காகும் செலவினை வழங்க அனுமதிக்கலாம்.

**பொருள் : 27**

நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தேசிய நெடுஞ்சாலையின் மையத்தில் இரு முகப்பு கொண்ட 120 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகள் 163 எண்ணிக்கை அமைக்கப்பட்டு, ஒரு வருடத்திற்கு மேலாகி உத்திரவாத காலம் முடிவடைந்துள்ளதால், தற்போது நகராட்சி மூலம் பராமரிக்கப்பட வேண்டும். எனவே, மேற்கண்ட பணி அவசியம் என்பதால், 163 எண்ணிக்கையிலான 120 வாட்ஸ் எல்.இ.டி மின்விளக்குகளை ஒரு வருடத்திற்கு ஆண்டு பராமரிப்பு (AMC) பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.7.80 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் : 429/2020/இ1))

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 28**

வார்டு எண் :15 அண்ணாநகர் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தை ஒட்டி சுற்றுச்சுவர் இல்லாத காரணத்தினால், அதன் அருகில் உள்ள செப்டிக் டேங்க் மேல் பகுதியில் இரவு நேரங்களில் சமூக விரோத செயல்கள் நடைபெற்று வருகிறது. இதனை தடுக்கும் பொருட்டு, சமுதாயக் கழிப்பிடம் பகுதியிலிருந்து ஆணையாளர் குடியிருப்பு கேட் வரை சுற்றுச்சுவர் புதியதாக கட்டுவதற்கும், ஆணையாளர் குடியிருப்பு பகுதியில் வடிகால் இல்லாத காரணத்தினால், குடியிருப்பிலிருந்து வெளியேறும் கழிவுநீருக்கு புதியதாக ‘Leach Pit‘ அமைப்பதற்கும் மற்றும் ஆணையாளர் குடியிருப்பு வளாகத்திற்கு சிறு சிறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் :429/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 29**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி பல்லடம் நகராட்சி குப்பை தொட்டி இல்லாத நகரமாக (BIN FREE CITY) மாற்றப்பட்டுள்ளது, பல்லடம் நகராட்சியில் IUDM 2012–13 மற்றும் 2013–14 ஆம் ஆண்டில் 76 எண்ணிக்கை Dumer bins வாங்கப்பட்டுள்ளது, தற்போது அனைத்து Dumerbin களும் பயன்பாட்டில் இல்லாத , பயன்படுத்த இயலாத நிலையில் துருபிடித்து சேமடைந்துள்ள 76 எண்ணிக்கை இரும்பு குப்பை தொட்டிகள் (Dumer bins) நீண்ட நாட்களாக பயன்படுத்தபடாமல் உள்ளது. இவற்றை இதே நிலையில் தொடர்ந்து வைத்திருந்தால் மிகவும் சேதமடைந்து எதற்கும் உபயோகமில்லாத நிலை ஏற்படும். எனவே மேற்கண்ட மிகவும் சேதமடைந்த பயன்பாட்டில் இல்லாத 76 எண்ணிக்கை இரும்பு குப்பை தொட்டிகளை பொது ஏலம் விடுவதற்கு தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(ந.க.எண்.468/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு**

மேற்காணும் பணியினை பொது ஏலம் விடுவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 30**

வார்டு எண் :01 முதல் 18 வரை உள்ள பொதுமக்களுக்கு, குடிநீர் தவிர இதர பயன்பாட்டிற்கு நகராட்சிக்கு சொந்தமான 97 எண்ணிக்கை ஆழ்துளைக் கிணறு மற்றும் 13 எண்ணிக்கை திறந்தவெளி கிணற்றிலிருந்து தண்ணீர் விநியோகம் செய்வதற்கும், பைப் லைன் கசிவு சரிபார்ப்பதற்கும் நகராட்சியில் குடிநீர் சம்பந்தமான நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், நடப்பாண்டு 2020–2021 பொதுப்பணித் துறை விலை விகிதப்படி வெளிக்கொணர்வு (Out source) மூலம் தற்காலிக பணியாளர்கள் வைத்து பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் : 429/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 31**

வார்டு எண் :01 முதல் 18 வரை பொதுமக்களுக்கு நகராட்சிக்கு சொந்தமான 12 மேல்நிலைத் தொட்டியிலிருந்து அத்திக்கடவு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி எல்லைக்கு உட்பட்ட கேட் வால்வு 405 எண்ணிக்கை மற்றும் Sluile Valve 40 எண்ணிக்கை என மொத்தம் 445 வால்வுகளை தினசரி பயன்படுத்தி, குடிநீரை சீரான முறையில் பிரித்து வழங்குவதற்கும், தினசரி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக Hyphochloride (Liquid Chlorination) ஐ குடிநீரில் சீரான அளவு கலந்து விநியோகிப்பதற்கும் நகராட்சியில் குடிநீர் பணியாளர்கள் நிரந்தரமாக இல்லை. எனவே, தற்காலிக பணியாளர்களை கொண்டு நடப்பாண்டு 2020–2021 பொதுப்பணித் துறை விலை விகிதப்படி மேற்கண்ட பணிகள் செய்வதற்கு வெளிக்கொணர்வு (Out source) மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் : 429/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தனி அலுவலர்/**
**ஆணையாளர்,**
**பல்லடம் நகராட்சி**